4. விதி 111–ன்கீழ் திருத்த அறிக்கை

தென் மாநிலங்களிடையே பேருந்துகள் இயக்குவதுபற்றி 22–10–2007 அன்று அளித்த விடையில் திருத்தம் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 111–ன்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றினைப் பேரவைக்கு அளிப்பார். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–10–2007 ஆம் நாளன்று சட்டப்பேரவையில், உடுக்குறியிட்ட வினா எண் 30749–க்கான துணைக் கேள்விக்கு பின்வருமாறு விவரங்களை அளித்திருந்தேன். "கர்நாடக மாநிலத்தோடு, 50 ஆயிரம் கிலோ மீட்டர் வரைக்கும் நாம் ஓட்டலாம் என்றும், கேரள மாநிலத்தோடு 5 ஆயிரம் கிலோ மீட்டர் ஓட்டலாம் என்றும், நம்முடைய பாண்டிச்சேரி மாநிலத்தோடு அவர்கள் 150 பேருந்துகள் ஓட்டினால் நாம் 400 பேருந்துகள் ஓட்டலாம் என்று இப்படியெல்லாம் ஒப்பந்தங்கள் வந்திருக்கின்றன.*

இதுகுறித்து திருத்த அறிக்கையைப் பேரவைமுன் அளிக்கிறேன்.

கர்நாடகா மாநிலத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் கர்நாடகா மாநிலப் பகுதியில் 53,313 கிலோ மீட்டரும், அதேபோல் கேரள மாநிலத்தில், கேரளப் பகுதியில் 5,031 கிலோ மீட்டரும் இயக்கலாம் என்றும், பாண்டிச்சேரி மாநிலத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி 90 பேருந்துகள் இருமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாகவும், 75 புதிதாகவும் இயக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி தடத்தில் 3:1 என்ற விகிதத்திலும், தமிழ்நாடு மற்றும் காரைக்கால் வழித்தடத்தில் 1:1 என்ற விகிதத்திலும் பேருந்துகளை இயக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.